(3) Film production concerns.

(4) Distribution concerns dealing with exposed films.

(5) Film processing laboratories.

SRI T. T. DANIEL : May I know whether the cinema operators get benefit under this scheme and may I also know what is the nature of the contributions the cinema employees will have to make for the Provident Fund?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would like to have a separate question.

Poramboke lands (North Arcot district)

* 1980 *Q.*—SRI S. R. MUNUSAMI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61 வடாற்காடு ஜில்லாவில் சர்க்கார் புறம்போக்கு நிலம் எவ்வளவு இருக்கிறது?

(இ) அவைகளில் எத்தனை ஏக்கர் நிலங்கள் தேவை என எத்தனை நிலமில்லா விவசாயிகள் கோரியுள்ளனர்?

(உ) எத்தனை மனுதாரர்களுக்கு நிலம் பட்டா செய்யப்பட்டுள்ளது?

THE HON. SRI M. A. MANICKAVELU : ( ) The extent of lands available for assignment on 1st July 1960 was 78,411.78 acres.

(இ) Twelve thousand seven hundred and seventy-six persons had applied for the assignment of lands in fasli 1370. The particulars of extent of lands applied for by them are not available.

(உ) 7,536.36 acres of lands were assigned to 3.600 persons in fasli 1370.

SRI S. R. MUNUSAMI : ஸார், வட ஆற்காடு ஜில்லாவிலே புறம்போக்கு நிலங்களை 20, 30 ஆண்டு காலமாக பயிர் செய்து வந்த விவசாயிகளை இப்போது அவர்கள் பட்டா வேண்டுமென்று கேட்கும்போது, ஏதோ சில காரணங்களைக் காட்டி ஆட்சேபணை தெரிவித்து, பஞ்சாயத்து போர்டார், மற்றும் சிலர் தகராறு செய்வது சர்க்காருக்குத் தெரியுமா? அதைப்பற்றி ரெவின்யூ உத்தரவு 23-ம் தேதி நவம்பர் மாதம் 1960-லே விவசாய சங்கத்திற்கு அனுப்பப்பட்ட உத்திரவிலே, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு நிலத்தில் பயிர் செய்யக்கூடிய விவசாயிக்கு அந்த நிலத்தை பட்டா செய்ய வேண்டுமென்று உத்திரவு இருக்க, அதை ஜில்லாவிலே நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சர்க்கார் உத்திரவிடுமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : பொதுவாக இந்த நிலங்கள் ஜாரி செய்வது இப்போது தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது. சில இடங்களில் ஆட்சேபணை இருந்தால், அது விசாரணை செய்யப்பட்டு பிற்பாடு

10th November 1961]

அதை முடிவு செய்கிருர்கள். நான் சொல்கிற புள்ளி விவரத்திலிருந்து மாதா மாதம் இந்த நிலம் ஜாரி செய்வது அதிக மாகி இருக்கிறது என்பது தெரியும். மார்ச்சு மாதத்திலே 497 ஏக்கர்; ஏப்ரலில் 623; மேயில் 761; ஜூனில் 661; ஜூலையில் 978. தனியாக இதற்கு சிப்பந்திகள் போட்டு தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

Taluk Headquarters Hospital (Paramakudi)

* 1981 *Q.*—SRI K. RAMACHANDRAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether orders have been issued for the construction of buildings for the taluk headquarters hospital at Paramakudi in Ramanathapuram district; and

(*b*) the number of beds sanctioned for the hospital?

THE HON. SRI M. A. MANICKAVELU: (*a*) & (*b*) General sanction for the construction of new buildings for the Government Hospital, Paramakudi, with 32 beds, has been accorded.

Industrial training school (Ariyalur)

* 1982 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திருச்சி மாவட்டம் அரியலூரில் தொழில் பயிற்சிப் பள்ளி நிறுவ உத்தேச முண்டா?

(இ) ஆமென்ருல் எப்போது நிறுவப்படும்?

(உ) அதற்காக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா? அதன் விவரமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) Yes, Sir.

(இ)The Industrial Training Institute at Ariyalur will start functioning from 1st February 1962.

(உ) Yes, Sir. Action has been taken to acquire lands for accommodating the Industrial Training Institute. Purchase of equipment is under progress.

Misappropriation of panchayat funds

* 1983 *Q.*—SRI N. MARUDACHALAM: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) கோவை ஜில்லா, 22-ம் நெம்பர் நஞ்சுண்டாபுரம் பஞ்சாயத்து தலைவர் பஞ்சாயத்துப் பணத்தை கையாடியதாக மேற்படி கிராம ஜனங்களிடமிருந்து சர்க்காருக்கு புகார் வந்துள்ளதா?

(இ) அப்படியானல், அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?